ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ்-அசாமி மொழிபெயர்ப்பில் சொற்பொருள் மற்றும் பண்பாட்டு இடைவெளிகள்: ஒரு பகுப்பாய்வு

## (An Analysis of Lexical and Cultural Gaps in Tamil-Assamese Translation)

**முனைவர் பா. விஜயகுமார்**
உதவிப் பேராசிரியர்
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயில் ஆய்வுத்துறை
குவகாத்திப் பல்கலைக் கழகம், அசாம்

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒரு மொழியின் கலை, அறிவியல் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தை மொழிபெயர்ப்பு மூலமாக மற்ற மொழியினருக்கும் அறிமுகப்படுத்தும் பணியில், மொழிபெயர்ப்பு ஒரு பாலமாக செயல்படுகிறது. இருப்பினும், மொழிபெயர்ப்பில் அடிக்கடி தோன்றும் சொற்பொருள் இடைவெளி சிக்கல்கள் பெரும் தடைகளாக உள்ளன. இந்தக் கட்டுரை, குறிப்பாக தமிழ்–அசாமி மொழிபெயர்ப்பின் நடைமுறைச் சவால்களை விளக்குகிறது. மேலும், இவ்வாறு உருவாகும் சிக்கல்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வாறு நுண்ணறிவுடன் அணுகலாம் என்பதற்கான வழிகாட்டுதல்களையும், நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளையும் முன்வைக்கிறது.*

***கருவிச் சொற்கள்:*** *மொழிபெயர்ப்பு, சொற்பொருள் இடைவெளிகள், நிகரன்கள்*

**அறிமுகம்**

இந்தியத் திருநாடு கலை அறிவியல் மற்றும் பண்பாட்டில் பலதரப்பட்ட பரிணாமங்களை எதிர்கொண்டு வளர்ச்சியின் உச்சத்திற்கு சென்றுகொண்டிருக்கும் ஒரு பண்பாட்டு மையமாக உலக நாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தச் செழுமையான பாரம்பரியத்தை, தத்தம் மொழி, வரலாறு, கலை, இலக்கியம் போன்ற பல்வேறு பரிமாணங்களோடு மற்ற மொழியினருக்கும் அறிமுகப்படுத்தும் முக்கிய கருவி மொழிபெயர்ப்பு ஆகும். மொழிபெயர்ப்பு என்பது சக புரிதலுக்கும் பண்பாட்டு உரையாடலுக்கும் பாலமாக விளங்கும் ஒரு மதிப்புமிக்க செயலாகும்.

இந்தியாவில் மொழிபெயர்ப்பு ஒரு கலையாகவும், அறிவுப் பயணமாகவும் பரிணமித்து வந்துள்ளதெனலாம். இருப்பினும், மொழிபெயர்ப்பின் போது எழும் சொற்பொருள் இடைவெளிகள், பண்பாட்டுப் பொருள்மாறல்கள் மற்றும் வாக்கிய அமைப்புச் சமநிலை (Structural Equivalence) ஆகிய சிக்கல்களைக் களைய வேண்டிய தேவை தீவிரமாகவே உள்ளது. குறிப்பாக, தமிழ் இலக்கியங்களை அசாமி மொழிக்கு மொழிபெயர்ப்பதில் எதிர்கொள்ளப்படும் மொழிநுட்பச் சவால்கள், சொற்பொருள் முரண்பாடுகள் மற்றும் மொழிபெயர்க்க முடியாத பண்பாட்டுச் சொற்கள் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்டுரை அமைகிறது. மேலும், இவ்வாறான சிக்கல்களை எதிர்கொள்ளும் மொழிபெயர்ப்பாளர்களுக் கான வழிகாட்டுதல்களும் தீர்வுகளும் இக்கட்டுரையில்

முன்வைக்கப்படுகின்றன.

## மொழிபெயர்ப்பு (Translation)

ஒரு மொழியில் உள்ள கருத்துகளையும், உணர்வுகளையும், பண்புகளையும் இன்னொரு மொழிக்குத் தக்கவாறு மாற்றி வெளிப்படுத்தும் செயலை மொழிபெயர்ப்பு எனலாம். தமிழில் "மொழிபெயர்ப்பு" என்பது இரண்டு சொற்களின் இணைப்பாகும். மொழி, அதாவது ஒருவருக்கொருவர் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும் வாக்கிய அமைப்பு, மற்றும் பெயர்ப்பு, அதாவது மாற்றும் செயல்.

மொழிபெயர்ப்பு என்பது ஒரே நேரத்தில் மூல மொழியில் (Source Language) உள்ள செய்திகளின் சாரம்சத்தையும், அதனுடன் தொடர்புடைய பண்பாட்டுத் தகவல் களையும் இலக்கு மொழிக்கு (Target Language) மாற்றும் செயலாகும். இச்செயல் வெறும் சொற்களை மாற்றுவதோடு மட்டும் அல்லாது, அதனுடன் தொடர்புடைய உணர்வுகளையும், பின்னணியையும் கூர்ந்து கவனித்து செயற்பட வேண்டும்.

## மொழிபெயர்ப்புப் பணி

மொழிபெயர்ப்புப் பணி என்பது ஒரு மொழியில் உள்ள கருத்துகளை மற்றொரு மொழிக்கு எடுத்துச் செல்லும் ஒரு கலையும், அறிவுப் பணியுமாகும். இது பல்வேறு மொழிகளுக்கிடையே ஒரு இணைப்புப் பாலாக செயல்படுவதுடன், மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பிற துறைகளின் பரிமாற்றத்திற்கும் இன்றியமையாதக் கருவியாக அமைந்துள்ளது.

### மொழிபெயர்ப்பு பலவகைகளாக உள்ளது

- இலக்கிய மொழிபெயர்ப்பு (Literary translation),
- அறிவியல் மொழிபெயர்ப்பு (Scientific translation),
- கருத்து மொழிபெயர்ப்பு (Conceptual translation),
- தழுவல் மொழிபெயர்ப்பு (Adaptation),

கணினி மொழிபெயர்ப்பு (Machine translation) ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

மொழிபெயர்ப்பாளரின் பணி குறித்து மொழியியல் அறிஞர் நைடா, (Nida) 'ஒரு மொழியில் உள்ள செய்தியை மற்றொரு மொழிக்கு பெயர்க்கும்போது, அது ஆற்றல் மிகுந்த நிகரன்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது, தரும் மொழியில் உள்ள சொல், சொற்றொகை, கருத்து போன்றவை பெறும் மொழியிலும் அதே நேர்த்தியுடனும், அதே தாக்கத்துடனும் பொருந்த வேண்டும்' என்கிறார்.

மொழிபெயர்ப்பில் நிகரன்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. நிகரன்கள் என்பது, மூலத்தின் பொருளை பெறும் மொழியில் அர்த்தம் மாறாமல், அதற்கேற்ப பதிலீடு செய்யக்கூடிய சொற்கள், உருபுகள் (morphemes), தொடர்கள் (phrases), வாக்கியங்கள் (sentences) ஆகும். இவை மூலத்திற்குத் துணையாகவும், இலக்கு மொழியில் இயற்கையாகவும் அமைய வேண்டும். (ப. மணிமாறன், ப.27) எனவே, திறமையான மொழிபெயர்ப்பாளர் ஒருவருக்கு, ஆற்றல் மிகுந்த நிகரன்களைத் தேர்வு செய்து, தரமான மொழி மாற்றத்தை நிகழ்த்தும் நுட்பம் மிக முக்கியமானது.

## தமிழ்–அசாமி மொழிபெயர்ப்பில் சொற்பொருள் இடைவெளிகள்

தமிழும் அசாமி மொழியும் இரு வேறுபட்ட மொழிக்குடும்பங்களுக்குச் சேர்ந்தவை. தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது, அசாமி இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. எனவே, இவ்விரு மொழிகளுக்கிடையே வெவ்வேறு இலக்கண அமைப்புகள், சொற்படிமங்கள், மற்றும் பண்பாட்டு சூழ்நிலைகள் காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகள் மொழிபெயர்ப்பில் சவால்களை அதிகரிக்கின்றன.

சொற்பொருள் இடைவெளிகள் (Lexical Gaps) என்பது இம்மாதிரியான சிக்கல்களில் குறிப்பிடத்தக்கதாகும். இது ஒரு மொழியில் உள்ள குறிப்பிட்ட சொற்களுக்கோ அல்லது கருத்துக்கோ மற்றொரு மொழியில் நேரடி நிகரன் இல்லாத நிலையை குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, தமிழில் உள்ள "அண்ணன்", "தங்கை", "மாமா" போன்ற உறவுசார் சொற்களுக்கு அசாமியில் சீரான நிகரணங்கள் இல்லாமல் பொதுவாக 'பாய்' –சகோதரர், 'ககா' மாமா/சித்தப்பா போன்ற பொதுவாக உள்ள வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், நுணுக்கமான உறவுமுறை வெளிப்பாடுகள் மொழிபெயர்ப்பில் இழப்படக்கூடிய நிலை உருவாகிறது.

இதேபோல மொழிபெயர்க்க முடியாத பண்பாட்டுச் சொற்கள் Cultural Untranslata-

ble) என்பது மற்றொரு முக்கியத்துவமான பரிமாணமாகும். இது, ஒரு மொழியில் உள்ள வழிபாட்டு முறைகள், சமய உணர்வுகள், வாழ்வியல் நிகழ்வுகள் மற்றும் கலாச்சாரத் தன்மைகளை அப்படியே மற்றொரு மொழிக்கு கொண்டு செல்ல இயலாத நிலையை குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, தமிழில் காணப்படும் "விரதம்", "மங்களம்", "அருட்பெருஞ்ஜோதி" போன்ற சொற்கள் அசாமியில் நேரடி நிகரனின்றி விளக்க வழியாகவே பெயர்க்கப்படுகின்றன. இத்தகைய சொற்களை, மொழிபெயர்ப்பில் மிகுந்த அவதானுத்துடன் அணுகப்பட வேண்டியுள்ளது.

**உதாரணங்கள்**

1. **தமிழ் ⟶ அசாமி**

⇒ தமிழ்: "அண்ணன்" (மூத்த சகோதரர்)

⇒ அசாமி: பாய்-சகோதரர், ஆனால் மூத்த/ இளைய என்பதைச் சுட்டாது)

இங்கு "அண்ணன்" என்ற உறவுப் பெயருக்குத் துல்லியமான தனித்த அசாமி வார்த்தை இல்லை. ஆகவே, நுணுக்கமான உறவுநிலை மங்குகிறது.

2. **அசாமி ⟶ தமிழ்**

- **அசாமி:** பிஹு (Bihu) – அசாமியர் கொண்டாடும் முக்கியமான நவீன/ பண்பாட்டுத் திருவிழா
- **தமிழ்:** "பொங்கல்" என மொழிபெயர்க்கலாம், ஆனால் அது நேரடி பதிலல்ல; தனித்த கலாச்சாரப் பாரம்பரியம் உள்ளது.

**சொற்பொருள் இடைவெளிகளிகளின் முக்கியத்துவம்**

மொழிபெயர்ப்பில் எண்ணக்குறிப்பையும், கலாச்சாரச் சாயலையும் மற்றொரு மொழிக்குள் சீராகக் கொண்டு செல்ல "சொற்பொருள் இடைவெளிகள்" ஒரு முக்கிய சவாலாக அமைக்கின்றன. காரணம், இவை மொழிகளில் உள்ள உள்ளார்ந்த ஒற்றுமையற்ற தன்மைகளைக் குறிக்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் அதன் வாழ்வியல் சூழ்நிலை, பண்பாடு, குடும்ப அமைப்பு, சமூகப்பண்புகள் ஆகியன பிரதிபலிக்கின்றன. ஒரு மொழியில் உள்ள ஒரு சொல், மற்றொரு மொழியில் காணப்படவில்லையென்றால், அது அந்த மொழிக்கெனவே தனித்துவமான சிந்தனையும் அணுகுமுறையும் இருப்பதை சுட்டுகிறது. உதாரணத்தில் கூறியவாறு, தமிழில் "அண்ணன்" என்ற சொல், குடும்பத்தில் உள்ள மூத்த சகோதரர் என்ற உறவுநிலையை துல்லியாகக் குறிக்கிறது. ஆனால் அசாமியில் அது பொதுவான சகோதரர் என்ற அளவில்தான் பொருள் படும். இது அண்ணன்-தம்பி உறவின் நுணுக்கத்தை இழப்பதற்கே வழிவகுக்கும்.

ஒரு சொல்லுக்கேற்ப பொருத்தமான பதிலைத் தேட முடியாதபோது, மொழி பெயர்ப்பு செயல் முழுமையான உரைப்பாடாக இருக்க முடியாது. வாசகர், மூல உரையின் உணர்வை, செயற்பாட்டை, அல்லது பண்பாட்டு அடையாளங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். இத்தகைய இடைவெளிகளைச் சமாளிக்க, மொழிபெயர்ப்பாளரின் மொழியியல் அறிவும், இரு கலாச்சாரங்களுக்குமான விளக்கப் புலமையும் அவசியமாகின்றன. மொழிபெயர்ப்பாளர் வெறும் மொழிமாற்றத்தை செய்வதில்லை, ஏற்கனவே இல்லாத வார்த்தையை உருவாக்கவோ அல்லது அதன் பொருளைப் பரிமாணமாக விளக்கவோ செய்வார். இது மொழிபெயர்ப்பாளரின் ஆற்றலுக்கும் தேர்ச்சிக்கும் உள்ள ஒரு சவால்.

சொற்பொருள் இடைவெளிகள், மொழிகளின் இடையிலான பண்பாட்டு வேறுபாடுகளையும் சிந்தனைகளையும் மொழிபெயர்ப்பாளருக்குப் புரியவைக்கும். இது ஒரு மொழியில் உள்ள ஒரு கருத்து அல்லது நிகழ்வு, மற்றொரு மொழியில் இல்லையேல், அதன் காரணமாக உருவாகும் இடைவெளி, அந்தச் சமூகத்தின் வழிபாடு, விழா, உறவுமுறை போன்ற பண்பாட்டு கூறுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யவும் உதவுகிறது.

இதில் மொழி பெயர்ப்பாளர் என்பவர் இரண்டு மொழிகளுக்கிடையே பாலமாகச் செயல்பட்டு, கருத்துகளை வெற்றிகரமாக பரிமாற்றம் செய்யும் நபர். அவர் மொழி மீது பற்று கொண்டவராகவும், மற்ற மொழிகளையும் கற்கும் ஆர்வமுள்ளவராகவும் இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பாளருக்கு இலக்கியங்களில் உள்ள ஆழமான கருத்துகளை புரிந்து கொண்டு, தாமே அந்த உரையின் கருப்பொருளாக மாறி, புதிய மொழியில் சுதந்திரமாக அதைத் தெரிவிக்கக் கூடிய நுண்ணுணர்வு தேவைப்படுகிறது. (அ.க. சுப்பிரமணியம், ப.5)

**சொற்பொருள் இடைவெளிகளைக் குறைப்பதற்கான தீர்வுகள்**

ஒரு மொழியில் உள்ள சொற்கள், கருத்துகள்,

கலாச்சாரப் பரிமாணங்கள் மற்றொரு மொழியில் நேரடியாக இல்லாதபோது, அந்த இடைவெளியை நிரப்புவதற்கான வழிமுறைகள் மொழிபெயர்ப்பாளரின் அறிவுத் திறனைப் பொருத்தது. இது மொழிகளின் சமூக, பண்பாட்டு சூழலைப் புரிந்து கொள்ளும் திறனையும் அதிகப்படுத்துகிறது. எ.கா அண்ணன் → மூத்த சகோதரர் என விளக்கிப் பயன்படுத்துதல். அருட்பெருஞ் ஜோதி → தெய்வீக ஒளி அல்லது ஆன்மீக ஒளி என விரிவாக மொழிபெயர்த்தல்.

- **நெருங்கிய நிகர்ச்சொல்** (Near Equivalence): நேரடி நிகர்ச்சொல் இல்லையெனில், பொருளில் சற்றே வித்தியாசம் உள்ள, ஆனால் பொதுவாக பொருந்தக்கூடிய சொற்களைப் பயன்படுத்துதல்.
- **வாக்கிய மாற்றம்** (Paraphrasing): அந்த சொற்றொடரின் பொருளை முழுமையாக எடுத்துரைக்கும் வாக்கியம் அல்லது சிறு விளக்க உரை சேர்த்தல். எ.கா. விரதம் பிடித்தல் ஒரு கோரிக்கைக்காக நோன்பு நோற்கும் கலாச்சார நடைமுறை
- **சொல் உருவாக்கம்** (Coining New Words): புதிதாக ஒரு சொல் உருவாக்குதல் அல்லது திராவிட/இந்தி வேர்ச்சொற்களுடன் கலந்த மொழியாக்கம் செய்தல். எ.கா. :அர்ச்சனை என்ற சொல் அசாமியில் இல்லாவிட்டாலும் வடமொழித் தொடரைப் பயன்படுத்தி உருவாக்க முடியும்.
- **பண்பாட்டு தழுவல் (Cultural Substitution / Adaptation):** அந்த சொல் சார்ந்த கருத்தை, இலக்குப் (target) மொழியின் வாசகர்கள் நன்கு அறிந்த சொல் அல்லது நிகழ்வால் மாற்றுதல். இது கவனமாகச் செய்ய வேண்டிய நடைமுறை. எ.கா. தமிழில் ‘பொங்கல்’ என்றால், அசாமியில் அதை ‘பிஹு’ போன்றது எனச் சில சமயங்களில் மாற்றலாம், ஆனால் அதன் தனித்துவம் இருப்பதால் ஒப்பீட்டுடன் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## தொகுப்புரை

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியின் சொற்களை மாற்றும் இயந்திரச் செயற்பாடல்ல. அது ஒரு மொழியின் மூலம் வெளிப்படும் சிந்தனை, வாழ்க்கைநெறிகள், பண்பாட்டு அடையாளங்கள் மற்றும் உணர்வுகளை மற்றொரு மொழிக்குள் எடுத்து செல்லும் நுண்ணிய கலையாகும். இவ்வகைச் செயலில், “சொற்பொருள் இடைவெளிகள்” ஒரு மிக முக்கியமான சவாலாகத் தோன்றுகின்றன. ஒரு மொழியில் உள்ள சொற்கள் மற்றொரு மொழியில் இல்லாத சொற்கள், அல்லது வேறுபட்ட உறவுமுறைகள், உணர்வுகள், விழாக்கள் போன்றன நேரடியாக மொழிபெயர்க்க இயலாத அளவுக்கு தனித்துவம் கொண்டவையாக இருக்கின்றன. இவை அந்த மொழியின் இயல்பு, அதன் சமூக அமைப்பு, கலாச்சாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. இதனால் ஏற்படும் இடைவெளிகள் மொழிபெயர்ப்பாளரை சிந்திக்கச் செய்கின்றன. அதானல்,

- ♦ புதிய சொற்களை உருவாக்கச் செய்யலாம்,
- ♦ விளக்கவுரை அல்லது பராமரிப்பு மொழிபெயர்ப்பு செய்யத் தூண்டலாம்,
- ♦ வாசகருக்குத் தேவைப்படும் தகவல்களை நுண்ணிய முறையில் பரிமாற்றம் செய்ய வழிநடத்தலாம்.

சொற்பொருள் இடைவெளிகளை மீறிச் செல்லும் முயற்சி என்பது ஒருபுறம் மொழியின் சொற்பொருள் வரம்புகளை விரிவாக்கம் செய்யும் முயற்சியாகவும், மறுபுறம் இரு கலாச்சாரங்களுக்கிடையிலான ஊடாடலை வளர்க்கும் பாலமாகவும் அமைகிறது. இது மொழிபெயர்ப்பாளர் மட்டுமின்றி வாசகரையும் மொழிமாற்றத்தின் மீதான புரிதலுக்குள் இட்டுச் செல்கிறது. இந்த வகை முயற்சிகள், குறிப்பாக தமிழ்–அசாமி மொழிபெயர்ப்பு பணியில், ஒரே நேரத்தில் மொழியியல் அறிவையும் பண்பாட்டுத் திறனையும் எதிரொலிக்கச் செய்கின்றன. இதன்மூலம் மொழிபெயர்ப்பு ஒரு ஆழ்ந்த கல்விமுறைத் துறையாகவும், கலாச்சாரப் பாலமாகவும், அறிவியல் சார்ந்த செயற்பாடாகவும் உருவெடுக்கிறது.

## துணை நின்ற நூல்கள்

1. சந்திரன் வீ., மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும், ராஜகுமாரி பதிப்பகம், திருவல்லிக்கேனி, சென்னை, 2007
2. சுப்பிரமணியம் அ.க., மொழிபெயர்ப்புக் கலை, விவேகானந்த சபை புத்தக சாலை, மொழும்பு 13, 1954
3. மணிமாறன் ப, மொழிபெயர்ப்பு நெறிமுறைகள், அண்ணாமலைப் பல்கலை கழகம், சிதம்பரம், 2008,